**மாவட்ட உ ரிமையியல் நீதிமன் றம், நா கப் பட்டினம்.**

**முன்னிலை ல திரும தி. எல். ஜகிலா, எம். ஏ, எம்எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, நாகப்பட்டினம்.

2043 திருவள்ளுவராண்டு, ஸ்ரீ ஜய வருடம் புரட்டாசித் திங்கள் 23ம் நாள்

2014ம் ஆண்டு அகடோபர் மாதம் 9ம் நாள், வியாழக் கிழமை

**அ.வ .எண் . 122/20 14**

வி. கமலக்கண்ணன் ..........வாதி

/ எதிர் /

1. வட்டாட்சியர், நாகப்பட்டினம்
2. மாவட்ட ஆட்சியர், நாகப்பட்டினம் .........பிரதிவாதிகள்

இவ்வழக்கில் 07.10.2014 அன்று என் முன் இறுதி விசாரணை செய்யப்பட்டு, வாதிக்காக வழக்கறிஞர்கள் திரு. பி. ஸ்ரீதரன் மற்றும் திரு. எஸ். சண்முகம் ஆகியோர் ஆஜராகியும், பிரதிவாதிகளுக்காக அரசு வழக்கறிஞர் திரு. எஸ்.ஆறுமுகம் அவர்கள் ஆஜராகியும், வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் ஆற்றிய வாதம் மற்றும் ஆவண சாட்சியங்களை பரிசீலித்து, இது நாள் வரை என் பரிசீலனையில் வைத்திருந்து இன்று இந்நீதிமன்றம் பகரும்,

WEB COPY

**தீர்ப் புரை**

இவ்வழக்கின் வாதியை காலஞ்சென்ற நீலாவின் வாரிசு என்று விளம்புகை செய்தும், அதனை தொடர்ந்து 1ம் பிரதிவாதி அலுவலகம் வாதிக்கு ஒரு வாரிசு சான்றிதழ் வழங்க செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க உத்தரவிடக்கோரி இவ்வழக்கு.

**2. வழ க்குரையின் சுரு க்கம்**

வாதியின் சித்தி நீலா என்பவர் கடந்த 25.01.2014 அன்று காலமாகிவிட்டார் என்றும், வாதியின் சித்தி நீலா, அவருடைய கணவர் ராதாகிருஷ்ணன் என்பவரிடமிருந்து கடந்த 14.08.1986ல் விவாகரத்து பெற்றுள்ளார் என்றும், சென்னையில் விவாகரத்துக்குப்பின் தனியாக வசித்து வந்தார் என்றும், வாதியின் சித்தி நீலா இறந்த பின்பு வாதியின் வீட்டில் அனைத்து ஈம காரியங்களும் நடைபெற்றது என்றும், இந்நிலையில் இறந்த நீலாவிற்கு அவருடைய கணவர் ராதாகிருஷ்ணன் மூலமாக யாதொரு வாரிசுகளும் கிடையாது என்றும், கணவரிடமிருந்து சென்னை சிட்டி சிவில் கோர்ட்டில் விவாகரத்து பெற்றுள்ளார் என்றும், உடன் பிறந்த வாதியின் தாயாரான ராதாருக்மணியும் காலமாகிவிட்டார் என்றும், இந்நிலையில் வாதி தான் அவரை பராமரித்து வந்தார் என்றும், எனவே வாதி காலஞ்சென்ற நீலாவின் வாரிசு என்று கோரி வாரிசு சான்று வழங்க வேண்டி 1ம் பிரதிவாதி அலுவலகத்தில் கடந்த 25.03.2014ல் தாக்கல் செய்த

வாதி தான் என குறிப்பிட்டு ஒரு வாரிசு சான்றிதழ் வழங்க செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டியும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

**3. 1ம் பிரதிவ ாதி தரப் பில் தாக் கல் செய்து ள்ள எதிர்வழ க்குரையை 2ம் பிரதிவா தி தனதா க ஏற் றுக்கொ காண்ட எ திர் வழக ் குரையின் சுருக் கம்**

வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கினை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார் என்றும், வாதி காலஞ்சென்ற அவரது சித்தி நீலா கடந்த 21.05.2014 அன்று காலமாகிவிட்டார் என்பதனையும், மேலும் அவரது கணவரிடமிருந்து விவாகரத்து பெற்று விட்டார் என்பதனையும் மேற்படி இருவருக்கும் வாரிசுகள் எவரும் இல்லை என்பதனையும் வாதியின் தாயார் ராதாருக்மணியும் வாதி தவிர வேறு எவ்வித வாரிசுமின்றி காலமாகிவிட்டார் என்பதனையும் வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், வாதி காலஞ்சென்ற சித்திக்கு நேரடியான வாரிசு இல்லை என்பதால் சமூகம் நீதிமன்றம் மட்டுமே வாதியின் ஆவணங்களை சரி பார்த்து வாரிசு சான்றிதழ் வழங்கிட முடியும் என்பதால் இந்த பிரதிவாதியால் வாதிக்கு வாரிசு சான்றிதழ் வழங்காமல் திருப்பப்பட்டது என்றும் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார்.

WEB COPY

4. வழக்குரை, எதிர்வழக்குரை பரிசீலிக்கப்பட்டன. கீழ்க்கண்ட எழுவினாக்கள் விசாரணையின் பொருட்டு வனையப்பட்டுள்ளன.

1. வாதி கோரும் விளம்புகை பரிகாரம் அவருக்கு கிடைக்கக் கூடியதா?
2. வாதி கோரும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் அவருக்கு கிடைக்கக்கூடியதா?
3. இதர பரிகாரங்கள் குறித்து உத்தரவு என்ன?

5. வாதி தரப்பில் வா.சா.1 மற்றும் வா.சா.2 விசாரிக்கப்பட்டு, வா.த.சா.ஆ.1 முதல் 6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. ஆவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**6. எழுவினா.1**

வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. ஆவணங்களை பரிசீலித்து பார்த்ததில் வாதி தன்னை 25.01.2014ல் இறந்து போன நீலாவின் சட்டப்படியான வாரிசு என விளம்புகை செய்யக் கோரியும், அதன் அடிப்படையில் 1ம் பிரதிவாதி அலுவலகம் வாதிக்கு ஒரு வாரிசு சான்றிதழ் வழங்க வேண்டுமாய் செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரியும் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். இறந்து போன நீலா தன்னுடைய சித்தி என்றும் அவர் அவருடைய கணவரிடமிருந்து 1986லேயே விவகாரத்து பெற்று தனித்து வசித்து வந்தார் என்றும், அவருக்கு அவர் கணவர் மூலம் வாரிசுகள் யாரும் கிடையாது என்றும் அவருடன் உடன் பிறந்த சகோதரியான தன்னுடைய தாயாரும்

கட்சி. பிரதிவாதிகள் தரப்பு கட்சி யாதெனின் வாதியின் சித்தி நீலா 21.05.2014 அன்று இறந்துவிட்டார் என்பதனையும், மேலும் அவரது கணவரிடமிருந்து விவாகரத்து பெற்றுவிட்டார் என்பதனையும், மேற்படி இருவருக்கும் வாரிசுகள் இல்லை என்பதனையும் வாதி சட்டப்படி நிரூபிக்க கடமைபட்டுள்ளார் என்றும், வாதி இறந்துபோன நீலாவிற்கு நேரடியான வாரிசு இல்லாததால் நீதிமன்றம் மட்டுமே வாரிசு சான்றிதழ் வழங்கிட முடியும் என்பதால் வாதிக்கு வாரிசு சான்றிதழ் வழங்கமால் திருப்பப்பட்டது என்பது ஆகும்.

7. வாதி தரப்பில் தனது தரப்பு வழக்கை நிரூபணம் செய்வதற்காக வாதி தன்னை வா.த.சா.1 ஆகவும், ஒரு தங்கதுரை என்பவரை வா.சா.2 ஆகவும் விசாரித்துக் கொண்டு தனது தரப்பிற்கு ஆதரவாக வா.த.சா.ஆ.1 முதல் வா.த.சா.ஆ.6 வரையிலான ஆவணங்களை குறியீடு செய்துள்ளார். வாதியின் குடும்ப அட்டையின் ஒப்பிட்ட நகல் வா.த.சா.ஆ.1 ஆகவும், இறந்து போன நீலாவின் குடும்ப அட்டையின் ஒப்பிட்ட நகல் வா.த.சா.ஆ.2 ஆகவும், நீலாவின் இறப்பு சான்றிதழ் வா.த.சா.ஆ.3 ஆகவும், சென்னை சிவில் கோர்ட் அ.ம.எண்.118/86 உத்தரவு வா.த.சா.ஆ.4 ஆகவும், 1ம் பிரதிவாதி கொடுத்த மேலெழுத்து வா.த.சா.ஆ.5 ஆகவும், நீலாவின் உத்திரகிரியை பத்திரிகை வா.த.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் தங்களது தரப்பு கட்சியை நிரூபிக்க வாய்மொழி மற்றும் ஆவணச் சாட்சியங்கள் எதுவும் விடவில்லை.

WEB COPY

8. வா.த.சா.ஆ.2 முதல் 4ஐ பரிசீலித்து பார்த்ததில் நீலா என்பவர் 25.01.2014ல் இறந்துவிட்டார் என்பதும் அவர் இறக்கும் வரையில் சென்னையில் தனியே வசித்து வந்தார் என்பதும் அவர் அவருடைய கணவரிடமிருந்து 1986லேயே விவாகரத்து பெற்றுவிட்டார் என்பதும் அவர்கள் இருவருக்கும் குழந்தைகள் இல்லை என்ற விவரமும் தெரியவருகிறது. வா.த.சா.ஆ.5ஐ பரிசீலித்து பார்த்ததில் வாதி நீலாவிற்கு நேரடி வாரிசு இல்லை என்பதால் 1ம் எதிர்மனுதாரர் வாரிசு சான்றிதழ் கொடுக்கவில்லை என்ற விவரம் தெரியவருகிறது. வா.த.சா.ஆ.6ஐ பரிசீலித்து பார்த்ததில் வாதி தான் இறந்து போன சித்தியான நீலாவிற்கு இறுதி காரியங்களை செய்ததாக தெரியவருகிறது. வா.சா.1 தன்னுடைய சாட்சியத்தில் இறந்து போன நீலா தன்னுடைய தாயாரின் தங்கை என்றும், தன்னுடைய சித்திக்கும் அவரது கணவருக்கும் விவாகரத்து ஆகிவிட்டது என்றும் அவர்கள் இருவருக்கும் குழந்தைகள் கிடையாது என்றும், தன்னுடைய தாத்தா பாட்டிக்கு தன் தாயாரும் தன் சித்தி மட்டுமே வாரிசுகள் என்றும், தன்னுடைய பெற்றோர்கள் இறந்துவிட்டார்கள் என்றும் தன்னுடைய பெற்றோர்களுக்கு தான் ஒரே மகன் என்றும், எனவே இறந்த போன நீலாவிற்கு தானே வாரிசு என்றும் சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.2 தன்னுடைய சாட்சியத்தில் தான் முன்னாள் நகர மன்ற உறுப்பினர் என்றும், வாதியின் தந்தை சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார் எனறும், அவருடைய தாயார் 2012ல் இறந்துவிட்டார் எனறும் அவரது ஈமச் சடங்கில் தான்

போன நீலாவிற்கு குழந்தைகள் கிடையாது என்றும் அவருடைய இறுதி சடங்கை வாதி தான் செய்ததாகவும் அதில் தான் கலந்து கொண்டதாகவும் மேற்படி விவரங்கள் அனைத்தும் தனக்கு நேரிடையாக தெரியும் என்றும் குறிப்பிட்டுள்ளார். பிரதிவாதிகளின் தரப்பில் மேற்கண்ட விவரங்களை மறுத்தளிக்கும் விதமாக ஆவண சாட்சியங்கள் எதுவும் விடவில்லை.

9. வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவண, வாய்மொழி சாட்சியங்களை பரிசிலித்து பார்த்ததில் இறந்து போன நீலா வாதியின் சித்தி என்பதும் அவர் அவருடைய கணவரிடமிருந்து விவாகரத்து பெற்றுவிட்டார் என்பதும் அவருக்கு குழந்தைகள் எதுவும் கிடையாது என்பதும், வாதியின் பெற்றோர்களும் இறந்து விட்டார்கள் என்பதும், வாதியின் பெற்றோருக்கு வாதி மட்டுமே ஒரே வாரிசு என்பதும், எனவே இறந்து போன நீலாவிற்கு வாதி மட்டுமே வாரிசு என்றும் தெரியவருகிறது. எனவே இந்த நீதிமன்றம் இறந்து போன நீலாவிற்கு வாதி மட்டுமே வாரிசு என்று முடிவு செய்து வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கக் கூடியது என்று இந்நீதிமன்றம் கருதி இந்த எழுவினாவிற்கு முடிவு காண்கிறது.

WEB COPY

10: **எழுவினா : 2**

பிரதிவாதிகள் அரசாங்க அதிகாரிகள் என்பதாலும் அவர்கள் அவர்களுக்கென்று தனியே விதிமுறை மற்றும் நடைமுறைகளை பின்பற்றி வருவதாலும், இந்த நீதிமன்றம் ஏற்கனவே வாதி தான் இறந்து போன நீலாவின் வாரிசு என்று விளம்புகை செய்து விட்டதாலும், இந்த பரிகாரம் வாதிக்கு தேவையற்றது என்று இந்நீதிமன்றம் கருதி இந்த எழுவினாவிற்கு விடை காண்கிறது.

11. **எழுவினா.3**

இறுதியாக, விவாதிக்கப்பட்ட சங்கதிகளின் அடிப்படையிலும், பரிசீலிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையிலும், வாதி தான் இறந்து போன அவரது சித்தி நீலாவின் சட்டப்படியான வாரிசுதாரர் என்று முடிவு செய்யப்பட்டு வழக்கானது பகுதியாக அனுமதிக்கப்பட்டும், வாதி கோரியுள்ள செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்தை பொறுத்து தள்ளுபடி செய்யப்பட்டும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது. இவ்வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு செலவுத் தொகை பற்றி உத்தரவு ஏதும் இல்லை.

/ என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு மொழியப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2014ம் ஆண்டு அக்டோபர் மாதம் 9ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில்

மாவட்டஉரிமையியல் நீதிபதி,
நாகப்பட்டினம்.

**பின் இணைப ்புக ள்:**

**வாதி த ரப்பு ச ான்றாவண ங்க ள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | வா.த.சா.ஆ.1 | 2005-2009 | வாதியின் குடும்ப அட்டை | ஒப்பிட்ட நகல் |
| 2. | வா.த.சா.ஆ.2 | 2005-2009 | இறந்து போன நீலாவின் குடும்ப அட்டை | ஒப்பிட்ட நகல் |
| 3. | வா.த.சா.ஆ.3 | | நீலாவின் இறப்பு சான்றிதழ் | உண்மை நகல் |
| 4. | வா.த.சா.ஆ.4 | 14.08.1986 | சென்னை சிவில் கோர்ட் அ.ம.எண்.118/86 உத்தரவு | சான்று நகல் |
| 5. | வா.த.சா.ஆ.5 | 09.06.2014 | 1ம் பிரதிவாதி கொடுத்த மேலெழுத்து | அசல் |
| 6. | வா.த.சா.ஆ.6 | 02.03.2012 | நீலாவின் உத்திரகிரியை பத்திரிகை | அசல் |

WEB COPY

**பிர திவாதிக ள் தர ப்பு ஆவ ணங் கள்** இல்லை

**வாதி த ரப்பு ச ாட்சிகள்**

1. வா.சா.1 கமலக்கண்ணன் (வாதி)

2. வா.சா.2 தங்கதுரை ( முன்னாள் நகர மன்ற உறுப்பினர் )

**பிர திவாதிக ள் தர ப்பு சாட்சி** இல்லை.

**மா.உ.நீ.,**
**ந ாகப்பட்டினம்.**

WEB COPY

நேரிய / வரைவு தீர்ப்புரை

அ.வ.எண்.122/2014
நாள். 09.10.2014

WEB COPY

WEB COPY